# 3

# ரிஸாலத் - I

## ரிஸாலத்தின் அவசியம்



இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடான 'அகீதா' பிரதானமான மூன்று விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவை தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்பனவாகும்.

1. 'தவ்ஹீத்' என்பது அல்லாஹ் பற்றிய நம்பிக்கையையும்
2. 'ரிஸாலத்' என்பது இறைத்தூதர்கள், வேதங்கள் பற்றிய நம்பிக்கையையும்
3. 'மஆத்' என்பது மறுமை பற்றிய நம்பிக்கையையும் குறிக்கும்.

'தவ்ஹீத்' பற்றி முன்னைய வகுப்புக்களில் கற்றுள்ளீர்கள்.

உலகில் மனிதனைத் தனது பிரதிநிதியாகப் படைத்த அல்லாஹ், ‘கிலாபத், இபாதத், இமாரத்” ஆகிய பொறுப்புக்களை மனிதன் மீது சுமத்தினான். அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் வழங்கினான். இவையே ‘ரிஸாலத்’ அதாவது, ‘தூதுத்துவம்’ என அழைக்கப்படுகின்றது. இவை கிதாப் (வேதம்), சுஹுபு (ஏடுகள்) ஆக இறை தூதர்களுக்கு வஹி மூலம் வழங்கப்பட்டன. அவற்றுள் சிலவற்றின் பெயர்கள் அல் - குர்ஆன், அஸ் - ஸுன்னாவில் குறிப்பிடப்பட்டாலும் பலவற்றின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அப்பெயர்களை அல்லாஹ் மட்டுமே அறிவான்.

அல்லாஹ் வழங்கிய ‘ரிஸாலத்’ ஆனது, மனிதன் நிறைவேற்றவேண்டிய கட்டளைகள், தவிர்ந்து கொள்ளவேண்டிய விடயங்கள், மறுமையில் கிடைக்க விருக்கும் நற்கூலிகள், தண்டனைகள் என்பவற்றையும் போதிக்கின்றன.

மனிதனது சிந்தனா சக்தி ஓர் எல்லைக்குள் வரையறுக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு நன்மைகளையும், தீமைகளையும் தெளிவாகப் பிரித்துக் காட்டும் சக்தி அதற்கில்லை. எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் விடயங்கள் பற்றி அறியும் ஆற்றலும் அதற்கில்லை.

மனோ இச்சைகள் மனிதனது சிந்தனா சக்தியை மிகைத்து விடும் ஆற்றல் பெற்றுள்ளன. ஆகவே, சுயநலம், பேராசை, பதட்டம், மறதி போன்ற பலவீனங்களால் மனிதன் நடுநிலைமை தவறிவிடுகின்றான்.

சிந்தனா சக்தியால் மட்டும் சரியான பாதையைப் பெற்றுக்கொள்ள மனிதனால் முடியாது என்பதால், மனிதன் ரிஸாலத்தின் வழியில் வாழ வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளான். ஆதம் (அலை) சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டபோது படைத்தவனின் கட்டளைப் பிரகாரமே வாழ வேண்டும் என அல்லாஹ் அறிவுறுத்தினான்.

“நீங்கள் யாவரும் இங்கிருந்து இறங்கிவிடுங்கள். என்னிடமிருந்து (என்னுடைய தூதர்கள் மூலம்) நேர்வழி நிச்சயமாக வரும். எவர்கள் எனது நேர்வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு எந்தப் பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். எவர்கள் (அந்நேர் வழியை) நிராகரித்து நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கினார்களோ அவர்கள் நரக வாசிகள்...” (2:38-39)

இந்த வகையில் ஆதம் (அலை) முதல் முஹம்மத் ஸ அவர்கள் வரை ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அவர்களின் மொழியிலேயே ரிஸாலத் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது.

“(நபியே) இவ்வுலகுக்கு வந்த ஒவ்வொரு தூதரும் தன் மக்களுக்குத் தெளிவாக விபரித்துக் கூறுவதற்காக அம்மக்களின் மொழியிலேயே போதனை செய்யுமாறு அவர்களை அனுப்பி வைத்தோம்...” (14:4)

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அக்காலத்துக்குப் பொருத்தமான, அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்கள் மட்டுமே வழங்கப்பட்டன. அவற்றைப் பின்பற்றுவது



அச்சமுதாயத்துக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட அச்சமுதா யத்துக்கான இறைத்தூதர் வபாத்தானதும் அப்போதனைகள் செயலிழந்து விட்டன.

இவ்வுலகுக்கு இறுதியாக அருளப்பட்ட 'ரிஸாலத்' அல்குர்ஆன் ஆகும். இதற்கு முன்னர் வழங்கப்பட்ட வேதங்களை விடவும் அல்குர்ஆன் வேறுபட்டுக் காணப்படுகிறது. முன்னைய வேதங்கள், குறிப்பிட்ட சமுதாயத்துக்கும் காலத்துக் கும் பொருத்தமானவையாகக் காணப்பட்டன. ஆனால், அல்குர்ஆன் முழு மனித சமுதாயத்துக்குமான பொது மறையாகவும், இறுதி வேதமாகவும் காணப்படு கின்றது. முன்னைய வேதங்கள் மனிதர்களது சுயவிருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டு உண்மைத் தன்மையை இழந்து விட்டன. ஆனால், அல்குர்ஆன் அல்லாஹ்வின் பாதுகாப்பைப் பெற்ற வேதமாக அருளப்பட்டுள்ளது. இதில் எவ்வித கூட்டலோ, குறைத்தலோ மேற்கொள்ளமுடியாது; மேற்கொள்ளப்படவும் இல்லை. சுமார் 1400 வருடங்களுக்கு முன்னர் அது அருளப்பட்ட அமைப்பிலேயே இன்று வரை பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது. முன்னைய வேதங்கள் மொத்த மாகவும், ஒரே தடவையிலும் அந்த இறைத்தூதர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் அல்குர்ஆன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கட்டம் கட்டமாக, இருபத்தி மூன்று வருடங்களாக அருளப்பட்டது. அது மனிதனுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் தெளிவான வழிகாட்டல்களையும் கொண்டுள்ளது.

அல்குர்ஆனை நமது வாழ்க்கைக்கான வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். வெறுமனே ஓதுவதோடு மாத்திரம் நிறுத்திக் கொள்ளாது அதனை விளங்கி, அதன் போதனைகளின்படி எமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

''எவன் எனது நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கின்றானோ அவனுடைய வாழ்க்கை நிச்சயமாக நெருக்கடியானதாகவே இருக்கும். மறுமை நாளில் அவனை நாம் குருடனாகவே எழுப்புவோம்'' (20:124)

இந்த வகையில் அல்குர்ஆனை ஓதி அதனை விளங்குவதனூடாக எமது வாழ்வோடு தொடர்பான அனைத்துத் துறைகளையும் அல்குர்ஆனின் நிழலில் அமைத்துக் கொள்ள முயற்சிப்போம்.

**பயிற்சி:**

1. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

   i) அகீதாவில் உள்ளடங்கும் பிரதான விடயங்கள் எவை?

   ii) இவ்வுலகிற்கு இறுதியாக அருளப்பட்ட ரிஸாலத் எது?

   iii) ரிஸாலத் பற்றிய அல்குர்ஆன் வசனம் ஒன்று தருக.

2. செயற்பாடு:

   i) ''மனித வாழ்வின் வெற்றிக்கான ஒரே வழி ரிஸாலத்'' என்ற தலைப்பில் சிற்றுரை ஒன்று தயாரிக்குக.

   ii) அல்குர்ஆனுக்கும் ஏனைய வேதங்களுக்குமிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை அட்டவணைப்படுத்துக.